**செ. கு. எண்**: 465 **நாள்**:28.12.2012

<u>மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்</u>
<u>அறிக்கை – 28.12.2012</u>

திண்டுக்கல் மாவட்டம், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. மாரிக்காளை அவர்கள் 20.12.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்ட, தனிப் பிரிவில் (Special Branch) சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. செந்தில்குமார் அவர்கள் 12.12.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் நத்தப்பட்டி விலக்கு அருகில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 21.12.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

தேனி மாவட்டம், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திருமதி. ரராஜாத்தி அவர்கள் 7.12.2012 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 22.12.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்ட ஆயுதப் படை வாகனப் பிரிவில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. சரவணக்குமார் அவர்கள் 21.12.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் பெரிய நரிகோட்டை ஜெபத்தோட்டம் அருகில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி மதுவிலக்கு அமல்பிரிவில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. திருநாவுக்கரசு அவர்கள் உடல்நலக் குறைவால் 21.12.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், பூந்தமல்லி போக்குவரத்து புலனாய்வுப் பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. ராதா அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 24.12.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் திருமதி ராஜாத்தி, சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. செந்தில்குமார், திரு. ராதா, தலைமைக் காவலர் திரு. மாரிக்காளை, காவலர் திரு. சரவணக்குமார் மற்றும் முதல் நிலைக் காவலர் திரு. திருநாவுக்கரசு ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீ விபத்தில் காலமான உதவி ஆய்வாளர் திருமதி ராஜாத்தி, சாலை விபத்தில் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. செந்தில்குமார், காவலர் திரு. சரவணக்குமார், மாரடைப்பால் காலமான தலைமை காவலர் திரு. மாரிக்காளை, உடல்நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ராதா, திரு. திருநாவுக்கரசு ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**